**08.04.2026.**

**O.S.No. 49/2014**

**வா.சா. 1: பிரவீன் குமார்**

**<u>1 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) தாத்தா சொத்தை ஒரு இளவருக்கு மட்டும் எழுதி வைத்தது செல்லாது என நான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்து என் தாத்தாவிற்கு பூர்வீக சொத்து. அவ்வாறு பூர்வீக சொத்து என்று சொல்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த சொத்து என் கொள்ளு தாத்தா பழனியப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. 1966 மற்றும் 1967 ல் அந்த சொத்தை வாங்கியுள்ளார். பழனியப்ப கவுண்டருக்கு 4 மகன்கள் மற்றும் 2 பெண்கள். ராமசாமி, பி.எஸ். மணியம், செட்டியண்ணன், பழனிவேல் ஆவார்கள். பெண்கள் பெயர் ஞாபகம் இல்லை. ராமசாமி இறந்துவிட்டார். அவருடைய வாரிசுகள் ராஜா, கிருஷ்ணகுமார், பாவாயி அம்மாள்.

2) பாவாயி அம்மாள் 2 ஆண் மக்கள் ராஜா மற்றும் விஸ்வநாதன் மற்றும் யசோதா ஆகியோர்கள் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். விஸ்வநாதன் இறந்துவிட்டார். அவருடைய வாரிசுகள் மாலதி மற்றும் கிருஷ்ணகுமார் ஆவார்கள். ராமசாமியின் வாரிசுகள் இவ்வழக்கின் தரப்பினரா என்றால் தரப்பினராக உள்ளார்கள். பாவாயி அம்மாள் இறந்துவிட்டர். எப்போது இறந்தார் என்று ஞாபகம் இல்லை. அவர் இறந்துவிட்டார் என்ற விவரத்தை நீதிமன்றத்தில் பதிவு செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. பி.எஸ்.மணியம் இறந்துவிட்டார். நிர்மலாதேவி, தனலட்சுமி, லதாசெல்வி வாரிசுகள்.

3) பி.எஸ்.மணியம் மனைவி இந்திராணி 1ம் பிரதிவாதியாக உள்ளார். லதா செல்வியின் மகன் தான் 3ம் பிரதிவாதி மௌரியா. நானும் தனலட்சுமியும் சேர்ந்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கில் யார் யார் பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். அந்த பதிலுரையை ஆட்சேபித்து நான் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்

என்று சொல்கிறார். (குறிப்பு அவ்வாறு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை). 2 அட்டவணை சொத்துக்கள் தாக்கல் செய்துள்ளது. அ -அட்டவணை சொத்துக்களில் 4 சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. 75/1, 75/2ஏ, 75/3, 75/4பி2, 81/2 எத்தனை ஏக்கர் என்று சரியாக ஞாபகம் இல்லை. 2 வது அட்டவனை சொத்து க.எண். 73, 73/1, 73/2 ஆகும். அதில் 2 சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

4) மேற்படி 2 அட்டவணை சொத்துக்களும் பழனியப்ப கவுண்டருக்கு சுயராஜ்ஜியமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். 22.08.1966 தேதிய கிரய ஆவணப்படி பி- அட்டவணையில் 1 வது இலக்க சொத்து என்றால் சரிதான். பழனியப்ப கவுண்டருக்கு சொந்த ஊர் நாமக்கல் மாவட்டம் கோதூர் என்றால் தெரியாது. அவரது மனைவி பெயர் ராஜம்மாள் என்றால் சரிதான். அவர் பிழைப்பிற்காக மலேசியா சென்று விட்டார் என்றால் தெரியாது. அவருடைய ஆண் வாரிசுகள் மலேசியாவில் தான் பிறந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1965 ல் இந்தியாவிற்கு திரும்பிய பின்பு தான் வாசாஆ.1 ல் கண்ட சொத்தை கிரயம் பெற்றார் என்றால் அது பற்றி தெரியாது. 28.02.1967 தேதியிட்ட கிரய பத்திரத்தின் படி தான் அ- அட்டவனையில் உள்ள 1 முதல் 4 வரையில் உள்ள சொத்துக்களை கிரயம் வாங்கினார் என்றால் தெரியாது.

5) அ- அட்டவனையில் உள்ள 5 வது இலக்க சொத்து மேற்படி 28.02.1967 தேதியிட்ட கிரய பத்திரத்தில் இல்லை என்றால் சரிதான். அ அட்டவனையில் கண்டுள்ள சொத்துக்கள் அணைத்தும் 28.02.1967 தேதியிட்ட கிரய பத்திரப்படி தான் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. பழனியப்ப கவுண்டர் 1986-1987 வாக்கில் இறந்தார். 02.12.1974 ல் அவருடைய ஆண் வாரிசுகள் அனைவரும் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் இல்லை. அவ்வாறு வாய்மொழியாக பாக பிரிவினை செய்து அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் இல்லை.

6) அவ்வாறு பாக பிரிவினையும் பிரித்து கொண்ட படி அ -அட்டவனையில் கண்டுள்ள சொத்துக்களில் சர்வே எண். 81/2 செட்டியண்ணனுக்கும், பழனியப்ப கவுண்டருக்கும்

ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் தெரியும். அ- அட்டவணையில் கண்டுள்ள 1 முதல் 4 இலக்க சொத்துக்களை பி.எஸ். மணியனும் ராமசாமியும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். சர்வே எண். 81/2 செட்டியண்ணனுக்கும், பழனியப்ப கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டது சம்மந்தமாக அவர்களுக்குள் பாக பிரிவினை 22.08.1985 ல் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. அந்த பாக பிரிவினை ஆவணத்தை ஒப்படைத்துள்ளேனா என்றால் அது பற்றி தெரியாது.

7) மேற்படி 22.08.1985 ல் ஏற்பட்ட பாக பிரிவினை அடிப்படையில் வருவாய் துறை ஆவணங்களும் செட்டியண்ணன் மற்றும் பழனியப்ப கவுண்டருக்கு ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் பெயரில் சொத்துக்களின் வருவாய் ஆவணங்கள் உள்ளது என்று சொல்வது சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அ -அட்டவணையில் உள்ள 1 முதல் 4 சொத்துக்கள் குறித்து ராமசாமியும், மணியன் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் ஏற்பட்டு அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பி.எஸ் மணியன் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்களை 2 ம் பிரதிவாதியின் மகனான 3 ம் பிரதிவாதிக்கு 09.05.2012 ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தற்போது வரை அவர் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார். நான் சொல்வது தவறு என்றும் ஆவணம் ஏற்படுத்திய காலத்தில் இருந்து 3 ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

8) ராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவர் காலமான பின்னிட்டு அவருடைய வாரிசுகளான 6,7,8,9 பிரதிவாதிகள் 22.04.2013 தேதியில் 3 ம் பிரதிவாதிக்கு 1-3/4 சென்ட் நிலத்தை கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மீதம் உள்ள நிலத்தை ராமசாமியின் வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி ராமசாமியின் வாரிசுகள் மேற்படி சொத்தை குறித்து பாக பிரிவினை பத்திரம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

தாவா பி-அட்டவனையில் கண்டுள்ள 1 இலக்க சொத்துக்கள் விவசாய நிலமா, விலை நிலமா என்றால் விவசாய நிலம். அந்த சொத்தை நான் பார்த்துள்ளேன். சாட்சி பின்னிட்டு அட்டவனையில் குழம்பி விட்டேன் என்றும் அ -அட்டவனை சொத்து விவாசாய நிலம் என்றும் பி -அட்டவனை சொத்து மனை நிலம் என்றும் சொல்கிறார். பி அட்டவனை சொத்தில் கடை உள்ளது.

9) மனை நிலத்திற்கு கிழ புறத்தில் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்று சொன்னால் சரிதான். அது குடும்ப சொத்தில் இருந்து வாங்கப்பட்டது. வழக்கு சொத்துக்கள் பழனியப்ப கவுண்டரின் சுயராஜ்ஜியமான சொத்துக்கள் என்பதால் அது பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனவே 1ம் பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்ட சொத்து பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றும் அது சுயராஜ்ஜியமான சொத்து என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்துக்கு கிழபுறம் பழனியப்ப கவுண்டர் வாங்கிய சொத்து உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் மேற்படி கிழபுறம் உள்ள பழனியப்ப கவுண்டர் கிரயம் பெற்ற சொத்தை குறிப்பிடப்படவில்லை என்றும் 1ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை எழுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

**10)** 04.04.1986 பாக பிரிவினை பத்திரம் மணியனுக்கும், சிலருக்கும் இடையே ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரமாக போட்டுள்ளேன். இந்த பாக பிரிவினை பத்திரத்தில் பாத்தியப்பட்ட சொத்து பி- அட்டவனையில் கூறியுள்ள 1ம் இலக்க சொத்து என்றால் சரிதான். அந்த பாக பிரிவினை யாருக்கு எவ்வளவு என்று பிரித்துக் கொண்டார்கள் என்று தெரியாது. பாக பிரிவினையில் சொத்தை 4 இலக்கமாக பிரித்துள்ளார்கள் என்று தெரியும். இந்த சொத்துக்கள் பிரதிவாதி வசம் தான் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும் 4 , 7 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சொத்து என்றும் டாக்டர் பாபு என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. பாபு என்பவருக்கு கிரயம் ஆன சொத்தையும் சேர்த்து தான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் பாபு என்பவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 04.04.1986 தேதியிட்ட பாக பிரவினை

பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களை பி.எஸ் மணியன் மற்றும் பழனிவேலுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் மட்டுமே தற்போது உள்ளது என்றும் மற்ற சொத்துக்கள் விற்கப்பட்டுவிட்டது என்ற விவரம் தெரியும்.

11) தாவா பி- அட்டவனை சொத்தில் 2ம் இலக்க சொத்து 2ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அது குடும்ப சொத்தில் இருந்து 1973 ல் வாங்கப்பட்ட சொத்து ஆகும். நான் சொல்வது தவறு என்றும் அது பொது குடும்ப வருமானத்தில் இருந்து வாங்கப்பட்ட சொத்து அல்ல என்றும் அது அவருடைய தனிப்பட்ட சொத்து என்றும் சொன்னால் சரியல்ல. நான் பழனியப்ப கவுண்டருக்கு 3ம் தலைமுறை என்றால் சரிதான். இந்து வாரிசு உரிமை சட்டப்படி பழனியப்ப கவுண்டரின் சொத்துக்கள் அவருடைய முதல் நிலை வாரிசுகளால் பிரிக்கப்பட்டு விற்பனை செய்து விட்ட படியால் 3ம் நிலை வாரிசான நான் மேற்படி சொத்தில் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எனது சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் குறித்து எனது தாத்தா பி.எஸ்.மணியன் உயிரோடு இருக்கும் போதே பாக பிரிவினை மற்றும் விற்பனை செய்து விட்டதால் எனக்கு எந்த பாகமும் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

12) சாட்சி அ- அட்டவனை சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படவில்லை என்று சொல்கிறார். என்னிடம் காட்டப்படும் 05.02.1993 ஆவணம் தாவா பி அட்டவனையில் உள்ள சொத்து, ராஜா, விஸ்வநாதன் சொத்தை மேற்படி யார்கள் நடேசன் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் சான்றிட்ட நகல் பிவாசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.09.2001 ல் நடேசன் மேற்படி சொத்துக்களை வையாபுரி மற்றும் வீரகுமார் என்பவருக்கு விற்றுள்ளார் என்று சொன்னால் தெரியாது. தமிழ் எழுத்து எனக்கு படிக்க தெரியாது. பத்திரத்தில் உள்ள எழுத்துக்களை படிக்க தெரியாது என்று சொல்கிறார். 06.04.2022 ல் வையாபுரி மற்றும் வீரகுமார்

அவர்களும் தனது மகனுக்கு பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்று எனக்கு தெரியாது.

13) எனக்கு சொத்தில் எவ்வித உரிமையும், அனுபவமும், பாத்தியமும் இல்லை என்றும் பிரதிவாதிகளிடம் இருந்து பணம் பறிப்பதற்காக சொத்தினை அபகரிக்க நான் இவ்வழக்கை தாகக்கல் செய்துள்ளேன் என்றும் அதனால் தான் எனக்கு தாவா சொத்து விவரத்தை பற்றி எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மேற்படி 1ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை 2, 3 பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்.**

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.04.08 17:48:11 +0530

**Subordinate Judge, Attur.**